Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.12/2014

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : மழுவன் | Father/Husband Name | : அம்மாசி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.04.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06 day of 04.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது நல்ல சுக்காம்பட்டியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்கிறேன், தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். அசா1 ராமுவை தெரியும். சுமார் 15 வருடத்திற்கு முன்னர் ராமுவை பெண்கேட்டு குமாரும், அவரது தந்தையும் எங்கள் ஊருக்கு வந்தார்கள். அசா1 ராமு எங்கள் ஊர்க்காரர். திருமணத்தின்போது ராமுவிற்கு அவரது வீட்டில் நகை செய்தார்கள் என்று தெரியும், ஆனால் எவ்வளவு நகை என்று தெரியாது. திருமணத்தின்போது சீர் சாமான்கள் செய்தார்கள். நானும், எனது ஊர்க்காரர் திருமணம் முடிந்து அசா1 ராமுவை சாத்தமங்களத்தில் மாப்பிள்ளை வீட்டில் விட்டுவிட்டு வந்தோம். திருமணம் முடிந்தும், அசா1 ராமு அவரது பெற்றோர் வீட்டில் அவரது பெற்றோருடன் கீழையூரில் இருப்பதாக கேள்விப்பட்டேன். ஊர்த்திருவிழாவிற்கு வந்தபோது சொன்னார்கள். அவருக்கு பெண் குழந்தை உள்ளது. வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 ராமு கணவர் திருமணம் ஆகி 3 மாதங்களிலேயே வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 1ம் எதிரி முத்துக்குமார் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டு அவர் இந்தியா வருவதற்கு முன்பாகவே ராமுவிற்கு குழந்தை பிறந்துவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த குழந்தை கருங்காலக்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசா1 ராமு கீழையூரில் காட்டு ராஜாவுடன் குடும்பம் நடத்தி வந்தார், ஆனால் நான் அதை மறைத்து அவர் தனது பெற்றோருடன் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு விவரங்கள் தெரியாது, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.